# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 5

## பின்நவீனத்துவத் திறனாய்வு, பெண்ணியத் திறனாய்வு, தலித்தியத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

# பின்நவீனத்துவத் திறனாய்வு

தமிழ் இலக்கியச் சூழலில் பெரும் மாற்றங்கள் நிகழக் காரணமான வரலாற்று நிகழ்வுகள்

1. 80களில் சோவியத் பொதுவுடைமையரசின் வீழ்ச்சி
2. 90களில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரம்
3. அம்பேத்கரின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டம்

குறிப்பிடத்தக்க மாற்றங்களாகக் குறிக்கத்தக்கன:

1. பின் நவீனத்துவத் திறனாய்வு
2. பெண்ணியத் திறனாய்வு
3. தலித்தியத் திறனாய்வு

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## பின்நவீனத்துவம்

பெண்ணிய, தலித்தியச் சிந்தனைகள் வளர்வதற்கு ஊட்டமளித்த சிந்தனை.

எல்லாச் சமூக மதிப்பீடுகளையும் சந்தேகமுற்று ஒவ்வொன்றுக்குள்ளம் இருக்கும் ஒழுங்கீனங்களைக் கட்டுடைத்துக் காண்பதாக ஐரோப்பியச் சமூகத்தில் உயர்மட்டத்தில் தான்தோன்றித் தனமான ஒரு போக்காகத் தோன்றியதற்கு நியாயம் கற்பிக்கக்கூடாது என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## பின்நவீனத்துவம்

தன்னைச் சுற்றி நடக்கும் சமூக நிகழ்வுகளுக்குள்ளும் அந்நிகழ்வுகள் குறித்த கருத்தாக்கங்களுக்குள்ளம் பொதிந்து கிடக்கும் புனைவுகளைப் புரிந்துகொள்ள, மேற்கண்ட சிந்தனைகள் பெரிதும் பயன்படுகின்ற கருவிகளாக அமைந்தன.

## வரையறை

மையத்திற்கும் ஒழுங்கிற்கும் முமைத்தன்மைக்கும் நேர்கோட்டுப்பார்வைக்கும் எதிரானவை என்பதால் இதுதான் பின்நவீனத்துவம் என்று வரையறுக்க முடியாத கூறுகளை உள்ளடக்கியது.

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## பின்நவீனத்துவத்தைப் புரிந்துகொள்ளல்

பின்நவீனத்துவக் கலைச்சொற்கள்தான் புரிந்துகொள்வதில் மிரட்சியை உண்டாக்குகின்றன.
சொற்களுக்கான இயல்பான பொருளைக் களைந்துவிட்டுப் புதிய பொருளில் புரிந்துகொண்டு பொருள் காண முயல வேண்டும்.

## பின்நவீனத்துவம் என்ற சொல்லாட்சி

மேலை நாடுகளில் 1930 முதல் பயன்படுத்தப்படுகிறது
சார்லஸ் ஒல்சன் – தன் கடிதங்களிலும் எழுத்துக்களிலும் நவீனத்துவத்துக்கு எதிரான சொல்லாகப் பயன்படுத்தினார்.

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## பின்நவீனத்துவக் கருத்துக்களை முன்மொழிந்தவர்கள்

1. இர்வின் கோவ்
2. ஹரி லெவின்

நவீனத்துவம் வீழ்ச்சியடைந்துவிட்டது என அறிவித்தனர். நவீனத்துவத்தைக் கொண்டாடிய அறிவுஜீவிகளுக்கு எதிரானது.

| நவீனத்துவம் | இர்வின் கோவ் - பின்நவீனத்துவம் |
|---|---|
| மனித சமூகத்தை வரையறுத்துக்கொள்ள முடியும்; சமூக உறவுகளைப் புரிந்துகொள்ள முடியும் என நம்பியது. | அதிகார அமைப்பிற்குள் ஏற்பட்ட உடைவு, மரபார்ந்த கொண்டாட்டங்களில் ஏற்பட்ட சலிப்பு, எதிலும் நம்பிக்கையற்ற தன்மை ஆகியன எல்லாம் சேர்ந்த ஒரு கலங்கிய நிலையில் புரிந்துகொள்ள முடியாத புதிராகத்தான் சமூகம் அமைந்துள்ளது. |

# பின்நவீனத்துவத் திறனாய்வு

பின்நவீனத்துவக் கதைசொல்லி, கதாபாத்திரங்களற்ற உருவமற்ற ஒரு உலகைப் படைக்கத்தான் முயற்சிக்கிறார்.

இர்வின் கோவ் – "கருத்துக்களின் நிச்சயமற்ற தன்மை" இன்றுவரை வலுவான ஒரு கோட்பாடாக இருந்துவருகிறது.

---

வெஸ்லி பீட்லா, சூசன் சொண்டாக்

வெகுஜன இலக்கிய வடிவங்களுக்கும் உயர் இலக்கிய வடிவங்களுக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் கடந்துவிடுதல்.

பாலியல் கதைகள்,
விஞ்ஞானக் கதைகள்,
மர்மக் கதைகள்

→ இவற்றிலிருந்து ஒருவகையான எதிர்க்கலையினை உருவாக்குவனவே சிறந்த பின்நவீனத்துவப் படைப்பாகும்.

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## சூசன் சொண்டாக் – கலை குறித்து

கலையின் முக்கியமானது உணர்வைத் தூண்டும் ஒருவகை ஆற்றல்தான். எழுத்தே ஒருவகையான கேலி விளையாட்டு. குழந்தை போல நேரடியாக அனுபவிக்க வேண்டியது தான் கலை.

## ஜெரால்டு கிராப் – கலை குறித்து

கலை அழகியல் ஒருவகையான சக்தி. புறவயமானது. ஆனால், விளங்கிக்கொள்ள முடியாதது; கட்டுப்படுத்த முடியாதது. எதிலும் நிச்சயமற்ற தன்மையை இவர் வலியுறுத்துகிறார்.

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## ழன் பிரான்சிஸ் லியோடார்டு – மகா எடுத்துரைப்பு

1. மகா எடுத்துரைப்புகள் (Grand Narratives) எதுவுமே உண்மைகளை மறைத்துவிடுபவைகளாகும்.
2. மார்க்சியம், கிறித்துவம் போன்ற பொதுமைப்படுத்தப்பட்ட மகா எடுத்துரைப்புகள் வரலாற்றுப் போக்கில் தமக்குத் தாமே எதிரியாகப் போவதற்குக் காரணம் இதுதான்.
3. இலக்கியம் என்பது சிறுசிறு எடுத்துரைப்புகளாக (little Narratives) இருக்க வேண்டும்.

# பின்நவீனத்துவத் திறனாய்வு

## டேவிட் லாட்ஸ் – பின்நவீனத்துவ எடுத்துரைப்பு உத்திகள்

1. முரண்படுதல் (Contradiction)
2. வரிசைப்படுத்துதல் ( Permutation)
3. தொடர்ச்சியின்மை (Discontinuity)
4. மிகை ( Excess)
5. துழாவும் தன்மை ( Randomness)
6. குறைச்சுற்று (Short Circuit)

# பின்நவீனத்துவத் திறனாய்வு

பின்நவீனத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு நவீனத்துவத்துக்கும் பின்நவீனத்துவத்துக்கும் உள்ள வேறுபாடுகள் உதவும்

| நவீனத்துவம் | பின்நவீனத்துவம் |
| --- | --- |
| 1. வடிவம் | 1. வடிவமின்மை, எதிர்வடிவம், திறந்த வடிவம் |
| 2. நோக்கம்/குறிக்கோள் | 2. விளையாட்டு, கேளிக்கை |
| 3. வடிவமைத்தல் (டிசைன்) | 3. தற்செயல் நிகழ்வு |
| 4. கலைப் பொருண்மை | 4. கலைச்செயல்முறை |
| 5. தொலைவுபடுத்திக்கொள்ளல் | 5. பங்கேற்றல் |
| 6. ஒருங்கமைத்தல்/படைப்பு | 6. தகர்ப்படைப்பு/எதிர்நிலை |
| 7. இருப்பு | 7. இன்மை |
| 8. நிச்சயத்தன்மை | 8. நிச்சயமற்ற தன்மை |

# பின்நவீனத்துவத் திறனாய்வு

உலகமயமாதலும் சந்தைப்பொருளாதரமும் தமிழ்ச் சூழலில் பின்நவீனத்துவச் சிந்தனை பரவுவதற்கான சூழலை உருவாக்கின.

எழுத்தாளர்கள்

ரமேஷ் – பிரேம், சாரு நிவேதிதா, எம்.ஜி. சுரேஷ், பூரணச்சந்திரன், அ. மார்க்ஸ், பா. வெங்கடேசன் முதலானவர்கள் பின்நவீனத்துவச் சிந்தனைப் பரவலாக்கத்தில் முன் நின்றவர்கள்.

இதழ்கள்

காலச்சுவடு, கதைசொல்லி, தலித், கவிதாசரண், பன்முகம், அட்சரன் முதலான சிற்றிதழ்கள் களம் அமைத்துக் கொடுத்தன.

அதிகாரத்திற்கு எதிரான எண்ணங்களைக் கட்டமைக்கின்ற முயற்சியாக இவை அமைந்தன.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 5

## பெண்ணியத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

# பெண்ணியத் திறனாய்வு

19ஆம் நூற்றாண்டில் அரசியல் சிந்தனையாக மேலை நாடுகளில் தோற்றம் பெற்றது.

1. 1830 – ஐரோப்பாவில் பெண்கள் வாக்குரிமை பெற்றனர்
2. 1848 – நியூயார்க்கில் நடந்த செனகாபால்ஸ் மாநாடு பெண்ணிய இயக்கத்தின் மைல்கல்லாக அமைந்தது.

பெண்ணியச் சொல்லாடலை வளர்த்தெடுத்த பெண்ணிய அறிவுஜீவிகள் மேரி வுல்ஸ்டோன் கிரா஁ப்ட், சைமன் டி பௌவார், வெர்ஜினியா வுல்஁ப், கேட்மில்லட், ஜூலியா கிறிஸ்தவா, ஹெலன் சிக்ஸி

உலகெங்கும் மகளிரியம் (Women’s Study) என்ற புதிய கல்வித்துறை உருவாகிவிட்டது.

# பெண்ணியத் திறனாய்வு

ஆய்வுப்போக்கு

பெண்களின் சிக்கல்களை மானிடவியல், உளவிய்ல, சமூகவியல், மருத்துவ இயல், வரலாற்றியல் முதலான துறைகளின் அடிப்படையில் ஆராய்கின்ற போக்கு பெருகியுள்ளது.

கலை இலக்கியத் துறைகளிலும் பெண்ணின் சிக்கல்களை ஆராய்கிற பெண்ணியத் திறனாய்வு விளங்கி வருகிறது.

# பெண்ணியத் திறனாய்வு

## கேட் மில்லட் - பெண்ணியத் திறனாய்வின் நோக்கங்கள்

1. எல்லா  கலை இலக்கியங்களிலும் ஒன்றுபோலவே (தமிழில் தாயாக மட்டுமே) பெண்களைப் படைத்துக் காட்டுவதில் உள்ள ஆணாதிக்க அரசியலைக் கட்டுடைத்து வெளிக்கொணர்வது.
2. மொழி, மரபு, இலக்கியக் கொள்கைகள், எடுத்துரைப்பு முறைகளில் உள்ள ஆண் நலச் சொல்லாடல்களைக் கண்டெடுத்து மறுபார்வைக்கு உட்படுத்துவது.
3. பழைய இலக்கியங்கள் அனைத்தையும் பெண்ணிய நோக்கில் அணுகி ஆராய்வது.

# பெண்ணியத் திறனாய்வு

## எலைன் ஷோவால்டர்

கேட் மில்லட்டின் பொதுப்பார்வையிலிருந்து விலகி,
பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்யது மதிப்பிடவேண்டும்.
பெண்நிலை நோக்குத் திறனாய்வு (Gyno Criticism) என்று அதனைக் குறிப்பிட்டார். (தமிழில் மொழிபெயர்த்தவர் – செல்வி திருச்சந்திரன்)

பெண்மையத் திறனாய்வு என்ற சொல்லும் தமிழில் பயன்படுத்தப்படுகிறது.

# பெண்ணியத் திறனாய்வு

எலைன் ஷோவால்டர் - பெண்நிலை நோக்குத் திறனாய்வு

1. பெண் எழுத்தாளர்களையும் எழுத்துக்களையும் பகுத்தாராய, பெண்களால் அமையும் ஒரு வேலைத்திட்டத்தை வடிவமைப்பது.
2. பெண்கள் தங்களுக்கேயான இலக்கியக் கொள்கைகளை உருவாக்க முயலுதல்.
3. பெண் எழுத்தைப் பெண்ணே திறனாய்வு செய்தல். ஆண் மதிப்பீட்டை ஒதுக்கித் தள்ளுதல்

எந்த ஒன்றிற்கும் பெய் சூட்டுவதற்கான அதிகார அரசியலைப் பெண் கைப்பற்ற வேண்டும். அதன் மூலம் பெண் விடுதலை சாத்தியமாகும்.

# பெண்ணியத் திறனாய்வு

## எலைன் ஷோவால்டர் - பெண்நிலை நோக்குத் திறனாய்வு

1. பெயரிடும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பெண் செயல்படவேண்டிய முதல் தளம் மொழி.
2. ஆண்களாலான மொழி உலகத்திலிருந்து வெளியேறி பெண்கள் தங்களுக்கான மொழியை உருவாக்கிக்கொள்ளவேண்டும்.

## ஹெலன் சிக்ஸி (பிரெஞ்சுப் பெண்ணியலாளர்) – பெண் மொழி எப்படி இருக்கும்?

பெண் மொழி அராஜகம் மிக்கது; ஆண் எழுத்துக்களில் உள்ள ஒழுங்குமுறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவது; படைப்பவர் – வாசகர் என்கிற எழுவாய்களைத் தகர்த்தெறிவது; எல்லாவிதமான அடக்குமுறைகளிலிருந்தும் தாண்டிக் குதித்து எழுவது.

# பெண்ணியத் திறனாய்வு

## பெண்நிலை நோக்குத் திறனாய்வு

இலக்கிய வகைமைகள் குறித்தும் ஆழமாகச் சிந்திக்கிறது. ஆண்களின் மகா எடுத்துரைப்பு வடிவங்களாக விளங்கும் வீரதீரக் கதைகள், காவியங்கள்ல், துன்பவியல் நாடகங்கள் முதலியவை ஆண்களுகேற்ப வடிவமைக்கப்பட்டவை.

கதை புனையும் பெண் எழுத்தாளர்கள் தங்கள் எடுத்துரைப்பு வடிவத்திலும் புதுமை செய்தாக வேண்டும் என வலியுறுத்துகிறது.

# பெண்ணியத் திறனாய்வு

## தமிழில் பெண்நிலை நோக்குத் திறனாய்வு

2000க்குப் பிறகுதான் பெண்கள் எழுத வந்தனர்.
பாரதியார் போன்ற ஆண்களே முயற்சி செய்தனர்.

## பாரதியார்

1. அவ்வையாரின் எழுத்துக்கள் குறித்த உன்னதமான மதிப்பீட்டைச் செய்துள்ளர்.
2. பெண்களுக்கு மட்டும் உரிய பாட்டுகளிலும் சந்தங்கள் உள்ளன (கல்யாணப்பாட்டு, நலங்கு, ஊஞ்சல், கும்மி, தாலாட்டு) என்கிறார்.

# பெண்ணியத் திறனாய்வு

## தமிழில் பெண்நிலை நோக்குத் திறனாய்வு

2000க்குப் பிறகுதான் பெண்கள் எழுத வந்தனர்.
பாரதியார் போன்ற ஆண்களே முயற்சி செய்தனர்.

## பாரதியார்

1. அவ்வையாரின் எழுத்துக்கள் குறித்த உன்னதமான மதிப்பீட்டைச் செய்துள்ளர்.
2. பெண்களுக்கு மட்டும் உரிய பாட்டுகளிலும் சந்தங்கள் உள்ளன (கல்யாணப்பாட்டு, நலங்கு, ஊஞ்சல், கும்மி, தாலாட்டு) என்கிறார்.

# பெண்ணியத் திறனாய்வு

**சரஸ்வதி வேணுகோபால்**

நாட்டுப்புறப் பெண்கள் பாடும் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களில் பெண் எதிர்ப்புக் குரல் இருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

**செல்வி திருச்சந்திரன்**

தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் – ஒரு பெண்நிலை நோக்கு (1977) – நூல்

காரைக்காலம்மையார், ஔவை, ஆண்டாள், பட்டினத்தார் குறித்து ஆராய்ந்துள்ளார்.

காரைக்காலம்மையார் பாடல்கள் – குடும்ப வட்டத்தைக் கடந்தவை

ஔவை, காரைக்காலம்மையார் – முதியவர்களாகக் காட்டுவது ஆணாதிக்கம்.

# பெண்ணியத் திறனாய்வு

செல்வி திருச்சந்திரன்

ஆண்டாளின் மீறல்களை மிக நுட்பமாக விளக்கியுள்ளார்.

> "ஆண் – பெண் எனப் பிரிக்கப்பட்டுக்
> கட்டியெழுப்ப்ப்பட்டிருந்த எல்லாக் கலாச்சாரக்
> கட்டுமானங்களையும் ஆண்டாள் தகர்த்தெறிகிறார்."

பட்டினத்தாரின் இருநிலைப் பார்வைகளைச் சுட்டுகிறார்

பெண்ணாகப் பார்க்கும்போது அவள் உறுப்புகளைப் புண்களாக்க் காண்கிறார்

தாயாகப் பார்க்கும்போது அதே உறுப்புகளைப் பாசமூட்டும் சுரப்பிகளாகப் பார்க்கிறார்.

# பெண்ணியத் திறனாய்வு

பெண்கள் படைப்பில் பெண்கள் (1986)

தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை கருத்தரங்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகள் ஆணாதிக்கப் பார்வையிலேயே அமைந்திருந்தன.

எம்.ஏ. சுசீலா – விடுதலைக்கு முன் வந்த தமிழ்ப் புதினங்களில் பெண்கள் – நூல்

பெண்ணிலை நோக்கு அடிப்படையில் அமையவில்லை

பெண் வரலாற்று எழுத்தியல்

பெண்கள் தங்களுக்கான வரலாற்றைத் தாங்களே எழுதிக்கொள்ள வேண்டும் என்பது பெண்ணிலை நோக்குத் திறனாய்வுச் சிந்தனை.

இராஜம் கிருஷ்ணன் – காலந்தோறும் பெண்

சாந்தி ச்ச்சிதானந்தன் – பெண்களின் சுவடுகளில்

பிரேமா அருணாசலம் – பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்

# பெண்ணியத் திறனாய்வு

இதழ்கள்

குட்டி ரேவதி – பனிக்குடம்

இலங்கையில் இருந்து - பெண்

எழுத்தாளர்கள் - கட்டுரைகள்

அம்பை, மங்கை, மைதிலி சிவராமன், கனிமொழி, மாலதி மைத்ரி, க்ருஷாங்கனி, அமரந்தா, பெண்ணிலா, சல்மா, பத்மாவதி விவேகானந்தன், அரங்க மல்லிகா

இவர்களின் கட்டுரைகள் தமிழ்ச் சூழலில் பெண்நிலை நோக்குச் சொல்லாடல்களை வளர்த்தெடுக்கப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.

# பெண்ணியத் திறனாய்வு

இதழ்கள்

குட்டி ரேவதி – பனிக்குடம்

இலங்கையில் இருந்து - பெண்

எழுத்தாளர்கள் - கட்டுரைகள்

அம்பை, மங்கை, மைதிலி சிவராமன், கனிமொழி, மாலதி மைத்ரி, க்ருஷாங்கனி, அமரந்தா, பெண்ணிலா, சல்மா, பத்மாவதி விவேகானந்தன், அரங்க மல்லிகா

இவர்களின் கட்டுரைகள் தமிழ்ச் சூழலில் பெண்நிலை நோக்குச் சொல்லாடல்களை வளர்த்தெடுக்கப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பெண் நிலை நோக்குத் திறனாய்வு அடிப்படையில் கலகக்குணம் மிக்கதாகவும், அதிகாரத்திற்கு எதிரானதாகவும், தலைகீழாகப் புரட்டிப் போடுவதாகவும் செயல்படவேண்டும்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 5

## தலித்தியத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

# தலித்தியத் திறனாய்வு

தலித்தியம் – உருவாக்கச் சூழல்

90 களில் அம்பேத்கரின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தை அரசாங்கமே நடத்தியது.
அவரது எழுத்துக்களையெல்லாம் தொகுத்து மாநில மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டது.

விடுதலைக்குப் பின்பு அம்பேத்கரின் போராட்டத்தால் கிடைத்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் மூலம் தலித்துகள் படிக்க உருவான சூழல்,
சீர்திருத்த இயக்கங்கள் உருவாக்கியிருந்த தலித்துகளுக்கு ஆதரவான சொல்லாடல்கள் முதலான பலவும் தலித்துகளே தங்களுக்கான அரசியலைக் கட்டமைக்கின்ற சூழலை உண்டாக்கியன.

# தலித்தியத் திறனாய்வு

## தலித்

வரலாறு முழுதும் பெண்களைப் போலவே அடையாளம் இல்லாமல் ஒதுக்கப்பட்டவர்கள் தலித்துகள்.

திருக்குலத்தார், ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தாகாதோர், பறையர், பஞ்சமர், அட்டவணை இனத்தவர், சண்டாளர், புலையர், அவருணத்தார் – இவ்வாறான சொற்களால் இழிவுக்கு உள்ளான மக்கள், தலித் அடையாளத்தின் கீழ் ஒன்றுதிரண்டு தங்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

# தலித்தியத் திறனாய்வு

## அடித்தளம் இட்டவர்கள்

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, பெரியசாமிப் புலவர், பண்டிட் முனுசாமி, ஜான்ரெத்தினம், முத்துவீரப்பாவலர், திருமதி கே. பொபனேஸ்வரி அம்மாள் முதலியோர்.

## தலித்துகளை ஒன்றுதிரட்டுவதற்காக இவர்கள்

1. மாநாடுகள் நடத்தினர்
2. புதிதாகத் தோன்றிய பத்திரிகை உலகத்தைப் பயன்படுத்தினர்

# தலித்தியத் திறனாய்வு

## தலித் இதழ்கள்

1869 – 1945 வரை 14 பத்திரிகைகளை தலித்துகள் நடத்தியுள்ளனர்

சூரியோதயம், பஞ்சமர், திராவிடப் பாண்டியன், ஆந்திரோர் மித்ரன், மகா விகடதூதன், பறையன், இல்லற ஒழுக்கம், பூலோக வியாசன், தமிழன், திராவிட கோகிலம், தமிழ்ப் பெண், ஆதி திராவிடன், தீனபந்து, தமிழன், ஆதி திராவிட மித்திரன், சமத்துவம்.

1925-இல் பெரியர் சுயமரியாதை இயக்கத்தைத் துவங்குவதற்கு முன்பே சுயமரியாதை என்ற கருத்தாக்கத்தை இவர்கள்தான் உருவாக்கியுள்ளனர்.

அயோத்திதாஸ் பண்டிதர் (1845-1914)

1. தமிழ், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் எனப் பன்மொழிப் புலமையாளர்
2. கிறுத்துவம், இஸ்லம் குறித்தும் ஆராய்ந்துள்ளார்
3. 1870இல் நீலகிரியில் அத்வைதானந்த சபாவை நிறுவியுள்ளார்
4. 1881இல் திராவிட மகாஜன சபா
5. 1898இல் சாங்கிய புத்தர்கள் சங்கம்

1891இல் ஊட்டியில் திராவிட மகாஜன சங்க மாநாட்டை நடத்திப் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார். தலித் மக்களை ஒன்றுதிரட்டிப் பல போராட்டங்களை நடத்தியுள்ளார்.

# தலித்தியத் திறனாய்வு

## எழுச்சியும் வீழ்ச்சியும்

அயோத்திதாசரால் எழுச்சியுற்ற தலித் விடுதலைக்குரல் இடையில் தோன்றிய,
இந்திய தேசிய இயக்கம், நீதிக்கட்சி, தனித்தமிழ் இயக்கம், சைவ சமய எழுச்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சுயமரியாதை இயக்கம், ம.பொ.சி.யின் தமிழ்த் தேசியக் கட்சி இவற்றோடு
கிறித்துவ, இஸ்லாம் மதமாற்றம், மேல்சாதியினர் கட்டிய சாதிச் சங்கங்கள் முதலியன எல்லாம் சேர்ந்து தலித்துகளுக்கான இயக்கத்தைச் சிதைத்துள்ளன.

1990களில்தான் தலித்துகள் மீண்டும் தங்களுக்கான அரசியலைத் தாங்களே தீர்மானிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டனர்.

# தலித்தியத் திறனாய்வு

## தலித் இலக்கியக் கொள்கைகள்

அம்பேத்கரியத்தைத் தனது தத்துவத் தளமாகக் கொண்டுள்ளது.

1. புனிதம் எனக் கட்டமைக்கப்பட்ட அனைத்தையும் கேள்விக்குட்படுத்துவது.
2. அதிர்ச்சியூட்டுவது
3. கலகக்குரலை வடிவமைப்பது
4. மீறலை முன் நிறுத்துவது
5. மகா எடுத்துரைப்புகளைத் தவிர்ப்பது
6. நாட்டுப்புற மரபைப் பின்பற்றுவது
7. தலித் மொழியை, பேச்சு மொழியை முன்நிறுத்துவது
8. சுய வரலாற்றுக் குணம் கொண்டிருப்பது
9. தலித் இலக்கியங்களைத் தலித்துகளே எழுதுவது.

# தலித்தியத் திறனாய்வு

தலித் இலக்கியத் திறனாய்வு

1. தலித் இலக்கியம் தோன்றியுள்ள அளவுக்குத் தலித் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியடையவில்லை.
2. பிற சாதியினர் தலித் இலக்கியத்தைத் தவிர்த்தே வந்துள்ளனர்.
3. தலித் இலக்கியங்களைத் தலித்துகளே திறனாய்வு செய்கின்ற சூழல் நிலவுகிறது.

தலித் இலக்கியத் திறனாய்வுக்கு எடுத்துக்காட்டுக்கள்.

1. ராஜ் கௌதமன் – தலித் பண்பாடு, தலித் பார்வையில் தமிழர் பண்பாடு, அறம், அதிகாரம்
2. ரவிக்குமார் – தலித் கலை இலக்கிய அரசியல் (தொகுப்பு)

இவர்கள் தலித்தியப் பழைய இலக்கியங்களைக் கட்டுடைத்துப் பார்த்த அளவுக்கு சமகால இலக்கியங்களைத் திறனாய்ந்து மதிப்பிடவில்லை

# தலித்தியத் திறனாய்வு

## பிற தலித்தியத் திறனாய்வாளர்கள்

கே.ஏ. குணசேகரன், பிலவேந்திரன், தருமராஜன், ப்ரதிபா ஜெயச்சந்திரன், உஞ்சராஜன், ராஜமுருகு பாண்டியன், விழி பா இதயவேந்தன், அன்பாதவன்

## தலித் பெண்ணியம்

பொதுவான பெண்ணியத்தைத் தாண்டி, தலித் பெண், உயர்சாதியாலும், தன் சாதி ஆண்களாலும் இரண்டு முறையில் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறாள் என்பதை முன்நிறுத்தி தலித் பெண்ணியம் என்ற கோட்பாட்டைத் தமிழ்ச் சூழல்லி உருவாக்கியவர்களில் குறிப்டத்தக்கவர்கள், சிவகாமி, பாமா, அரங்க. மல்லிகா  ஆகியோர்.

உண்மையான தலித் விடுதலை தலித் பெண் விடுதலையில்தான் உள்ளது.

# தலித்தியத் திறனாய்வு

## பிற தலித் ஆதாரவாளர்கள்

பத்மாவதி விவேகானந்தன், அ. மார்க்ஸ், அ. ராமசாமி, பழமலை, க. பஞ்சாங்கம், கவிதா சரன் முதலான சிலரும் தலித் சொல்லாடல்களில் ஆர்வம் காட்டுகின்றனர்.

பஞ்சாங்கம் – தற்கால இலக்கியங்கள் எல்லாம் தலித் இலக்கியங்களே என்று அறிவித்துள்ளர்.

## தமிழ்த் திறனாய்வில் புதிய போக்குகள்

1. பழைய திறனாய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் போக்கு – புதுமைப்பித்தனின் இலக்கியத்தடம்
2. பின்காலனித்தவ இலக்கியப் போக்கு.